[2008 ஏப்ரல் 16

109—

தொகுப்பு வீடு

***20467—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், குள்ளவீரம்பட்டி பகுதி மீனவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் மீன் பிடிக்கும் குள்ளவீரம்பட்டி பகுதி மீனவர்களுக்கெனத் தனியாக இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அரசின் சார்பிலே உரிமத்தையும் பெற்று, அங்கே மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டு வருகின்றார்கள். மழைக் காலங்களில் மேட்டூர் அணை நிரம்பியிருக்கின்ற நேரத்தில், அங்கே மீன்பிடித் தொழில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அணையில் நீர் குறைந்துவிடுகின்ற காலத்தில் மீன் பிடிக்க இயலாமல், மிக ஏழ்மை நிலையில் வாழக்கூடிய, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழக்கூடிய மீனவர்கள்தான் அந்தப் பகுதியிலே இருக்கின்றார்கள். ஆகவே, மேட்டூர் அணையை ஒட்டியிருக்கின்ற குள்ளவீரம்பட்டி, காவிரிப் பாலம், அண்ணா நகர், நவப்பட்டி ஊராட்சிப் பகுதி, மேச்சேரியிலே கோணாண்டியூர், சேத்துக்குளி போன்ற ஊர்களிலும், பெண்ணாகரம் பகுதியிலே நாகமரை என்ற ஊரிலும் மீனவர்கள்தான் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கு இதுவரையிலே தொகுப்பு வீடுகள் கட்டப்படவில்லை. ஆகவே

2008 ஏப்ரல் 16]

அவர்களின் ஏழ்மை நிலையைக் கருதி, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, மீண்டும் தொகுப்பு வீடுகள் திட்டத்தின்கீழ் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் மீன் பிடிக்கும் குள்ளவீரம்பட்டி பகுதி மீனவர்களுக்கெனத் தனியாக இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், இலவசத் தொகுப்பு வீடுகள் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசால் முடிவு செய்யப்பட்டு, குள்ளவீரம்பட்டி பகுதி மீனவர்கள், தாங்கள் சார்ந்துள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் முறையாகத் தீர்மானம் இயற்றி, சம்பந்தப்பட்ட மீன்வளத் துறை உதவி இயக்குநர் வழியாக, அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில், மத்திய, மாநில அரசுத் திட்டங்களில் உள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசத் தொகுப்பு வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், வீடுகள் பெற கீழ்க்கண்ட தகுதிகளை மீனவர்கள் பெற்றிருக்கவேண்டும்: (1) மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கவேண்டும்; (2) சொந்தமாக 3 சென்ட் பட்டா நிலம் வைத்திருக்கவேண்டும்; (3) மீனவர்கள் அளிக்க வேண்டிய சான்றுகள் அந்தந்த உறுப்பினர்கள் பெயரில் இருக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினரான மீனவர்கள், உரிமம் பெற்ற மீனவர்கள். அந்தத் தகுதி இருக்கின்ற, வீட்டுமனைப் பட்டா வைத்திருக்கக்கூடிய அந்த மீனவர்களுக்கு வழங்கினால்கூட போதுமானது. ஆகவே, மேட்டூர் அணைப் பகுதியில் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கின்ற பெரும்பாலானவர்களுக்கு, இந்த ஆண்டிலாவது நிதி ஒதுக்கி, அந்தத் தகுதியின் அடிப்படையிலாவது அனைவருக்கும் இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் முன்வருவாரா என்பதை மீண்டும் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டபடி, மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்களுக்கு, முறையாக அவர்களுடைய பெயரில் 3 சென்ட் பட்டா நிலம் இருக்குமேயானால், நிச்சயமாக மீனவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

110—

தொழிற்பேட்டை

***27813-திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.